ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2354/12 - 2023 ඔක්තෝබර් මස 17 වැනි අඟහරුවාදා - 2023.10.17

*2354/12 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 6/2022*

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் **ரமேஷ் பத்திரண**,
கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஒற்றோபர் 16.*

**ஒழுங்குவிதிகள்**

*2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் 20 ஆந் திகதிய 1493/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும் 2022 ஒற்றோபர் 25 ஆந் திகதிய 2303/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானவையுமான 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள்*

1A – G 40544 – 07 (2023/10)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள், அதற்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-

**"அட்டவணை**

| இல. | விபரங்கள் | கட்டணம் (அரசாங்க வரிகள் நீங்கலாக) |
|---|---|---|
| 1. | ஒரு கம்பனியின் பெயரை அங்கீகரித்தல் | ரூ. 2,300.00 |
| 2. | ஒரு தனியார் பிறைவேட் கம்பனியைக் கூட்டிணைத்தலும் மற்றும் அமைப்பக விதிகளும், ஒரு பணிப்பாளருடனும் ஒரு செயலாளருடனும். | ரூ. 11,500.00 |
| 2.1 | ஒவ்வொரு மேலதிகப் பணிப்பாளரும் | ரூ. 2,300.00 |
| 2.2 | ஒவ்வொரு மேலதிகச் செயலாளரும் | ரூ. 2,300.00 |
| 3. | ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியைக் கூட்டிணைத்தலும் மற்றும் அமைப்பக விதிகளும், இரு பணிப்பாளர்களுடனும் ஒரு செயலாளருடனும். | ரூ. 32,200.00 |
| 3.1 | ஒவ்வொரு மேலதிகப் பணிப்பாளரும் | ரூ. 2,300.00 |
| 3.2 | ஒவ்வொரு மேலதிகச் செயலாளரும் | ரூ. 2,300.00 |
| 4. | ஒரு வரையறுக்கப்படாத கம்பனியைக் கூட்டிணைத்தலும் மற்றும் அமைப்பக விதிகளும் ஒரு பணிப்பாளருடனும் ஒரு செயலாளருடனும். | ரூ. 25,000.00 |
| 4.1 | ஒவ்வொரு மேலதிகப் பணிப்பாளரும் | ரூ. 2,300.00 |
| 4.2 | ஒவ்வொரு மேலதிகச் செயலாளரும் | ரூ. 2,300.00 |
| 5. | உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியைக் கூட்டிணைத்தலும் மற்றும் அமைப்பக விதிகளும் இரு பணிப்பாளர்களுடனும் ஒரு செயலாளருடனும். | ரூ. 45,000.00 |
| 5.1 | ஒவ்வொரு மேலதிகப் பணிப்பாளரும் | ரூ. 2,300.00 |
| 5.2 | ஒவ்வொரு மேலதிகச் செயலாளரும் | ரூ. 2,300.00 |
| 6. | ஒரு கரைகடந்த கம்பனியைப் பதிவுசெய்தல் | ஐஅடொ 550.00 |
| 7. | ஒரு கரைகடந்த கம்பனியின் தொடர்ச்சிக்காக அதன் பதிவைப் புதுப்பித்தல் | ஐஅடொ 550.00 |
| 8. | கரைகடந்த கம்பனியொன்றின் இலங்கையிலுள்ள அலுவலகத்தின் நோக்கத்துக்காக அதன் செலவுகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு ஒரு வங்கிக்கு வரவுவைக்கப்பட வேண்டிய தொகையைப் பதிவுசெய்தல் | ஐஅடொ 100,000.00 |
| 9. | கடல்கடந்த கம்பனியொன்றினால் இலங்கையில் ஒரு தொழிலிடம் பதிவுசெய்யப் படுதல் | ரூ. 70,000.00 |
| 10. | ஒரு வருடாந்த விபரத்திரட்டைப் பதிவுசெய்தல் | ரூ. 7,000.00 |
| 11. | 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 223(2) ஆம் பிரிவினைப் பின்பற்றி ஒரு படிவத்தைப் பதிவுசெய்தல் | ரூ. 2,300.00 |
| 11.1 | ஒவ்வொரு பணிப்பாளரின் நியமனமும் | ரூ. 2,300.00 |
| 11.2 | ஒவ்வொரு செயலாளரின் நியமனமும் | ரூ. 2,300.00 |
| 12. | ஈடுகள், கட்டணங்கள் மற்றும் கடன்தொகுதிப்பத்திரங்களைப் பதிவுசெய்தல் | ரூ. 9,000.00 |
| 13. | ஒரு பெறுநரினால் அல்லது முகாமையாளரினால், ஒரு நிருவாகியினால் அல்லது ஒழிப்போனினால் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்களும் அறிக்கைகளும் அல்லாததும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டதுமான வேறேதேனும் ஆவணத்தைப் பதிவுசெய்தல் | ரூ. 2,300.00 |

| இல. | விபரங்கள் | கட்டணம் (அரசாங்க வரிகள் நீங்கலாக) |
|---|---|---|
| 14. | கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் வைத்திருக்கப்பட்ட ஒரு கோப்பைச் சோதனையிடுதல் | ரூ. 1,250.00 |
| 15. | கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் அல்லது அதன் பிரித்தெடுத்த பகுதியின் சான்றுப்படுத்துகை | ரூ. 1,250.00 |
| 16. | கட்டணங்கள் பற்றிய இடாப்பைச் சோதனையிடுதல் | ரூ. 1,250.00 |
| 17. | தனியாட்களைக் கணக்காய்வாளர்களாகப் பதிவுசெய்தல் | ரூ. 7,000.00 |
| 18. | பங்காண்மைகளைக் கணக்காய்வாளர்களாகப் பதிவுசெய்தல் | ரூ. 17,250.00 |
| 19. | பதிவுசெய்யப்பட்ட தனிப்பட்ட கணக்காய்வாளர்களின் பதிவைப் புதுப்பித்தல் | ரூ. 4,600.00 |
| 20. | பதிவுசெய்யப்பட்ட தனிப்பட்ட உயர்தொழில்சார் தொழிற் கணக்காய்வு நிறுவனங்களின் பதிவைப் புதுப்பித்தல் | ரூ. 7,000.00 |
| 21. | கம்பனியொன்றின் நிலைபற்றிய அறிக்கை | ரூ. 10,000.". |

---

ச.வ.-பி.6/2022

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 527 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**டாக்டர் ரமேஷ் பத்திரண,**
கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2023, ஒற்றோபர் 16.

**ஒழுங்குவிதிகள்**

2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் 20 ஆந் திகதிய 1493/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் 12 ஆந் திகதிய 1566/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறானவையுமான 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் (விபரத்திரட்டுக்கள், அறிவித்தல்கள் மற்றும் ஆவணங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-

(1) படிவம் I ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

**"படிவம் 1**

eRoC Towards the Business World

**கம்பனியொன்றைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவு

| | |
|---|---|
| முன்மொழியப்பட்ட கம்பனியின் பெயர் | |
| கம்பனியின் வகை | |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | (இலங்கையில் உள்ளபடியான முகவரி- அஞ்சற் பெட்டி முகவரியாக இருத்தலாகாது) |

**ஆரம்பப் பணிப்பாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | (இலங்கையர் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டின்படி) | |
| | தேஅஅ இல./ கடவுச்சீட்டு இல. மற்றும் வழங்குகை நாடு | (இலங்கையர் – தேஅஅ இல.)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டிலக்கமும் வழங்குகை நாடும்) | |
| | மின்னஞ்சல் முகவரி | | |
| | வதிவிட முகவரி | | |
| | செல்லிடத்தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| | நியமனத் திகதி: | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | |
| | ☐ [1]மேற்படி கம்பனியின் பணிப்பாளராக இருப்பதற்குச் சம்மதிக்கின்றேன். | | |
| | ☐ [1]ஒரு கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பதவி வகிப்பதிலிருந்து நான் தகுதியற்றவரல்லரெனச் சான்றளிக்கின்றேன். | | கையொப்பம் |

**ஆரம்பச் செயலாளர் / செயலாளர்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | (தனியாள் - தேஅஅ இன்படியான பெயர்)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு- கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| தேஅஅ இல. / கம்பனி இல./ குறியீட்டு இல. | | |
| செயலாளர் பதிவிலக்கம் | | |
| மின்னஞ்சல் முகவரி | | |
| நிரந்தர முகவரி | | |
| செல்லிடத் தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| நியமனத் திகதி : | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | |
| ☐ [2]மேற்படி கம்பனியின் செயலாளராக / செயலாளர்களாக இருப்பதற்கு நான் / நாம் சம்மதிக்கின்றேன் / சம்மதிக்கின்றோம். | | |
| ☐ [2]சட்டத்தின் 222 ஆம் பிரிவின்கீழும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழும் மேற்படி கம்பனியின் செயலாளர் பதவியை வகிப்பதற்கு நியமிக்கப்படுவதற்கான தகைமைகளை நான் / நாம் கொண்டுள்ளேன் / கொண்டுள்ளோம் எனச் சான்றளிக்கின்றேன் / சான்றளிக்கின்றோம். | | கையொப்பம் |

**ஆரம்பப் பங்குதாரர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | (இலங்கையர் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டின்படி) | |
| | தேஅஅ இல./ கடவுச்சீட்டு இல. மற்றும் வழங்குகை நாடு | (இலங்கையர் – தேஅஅ இல.)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டு இலக்கமும் வழங்குகை நாடும்) | |
| | பங்குகளின் எண்ணிக்கை | | |
| | மின்னஞ்சல் முகவரி | | |
| | வதிவிட முகவரி | | |
| | செல்லிடத்தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| | திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | |
| | ☐ | [3]எனது அறிவுக்கெட்டியவரை முன்மொழியப்பட்ட கம்பனியின் பெயர் ஏலவேயுள்ளவொரு கம்பனியின் பெயரை ஒத்ததாக அல்லது உருவொத்ததாக இருப்பதில்லை என வெளிப்படுத்துகின்றேன். | |
| | ☐ | முன்மொழியப்பட்ட கம்பனியின் அமைப்பக விதிகள் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாக இருத்தல் வேண்டும். முன்மொழியப்பட்ட கம்பனியின் அமைப்பக விதிகள் என்னால் கையொப்பமிடப்பட்ட பின்னிணைப்பு 'அ' வில் தரப்பட்டுள்ளவாறாக இருத்தல் வேண்டும். | கையொப்பம் |

**மொத்த பங்குகளின் எண்ணிக்கை** ☐

**மொத்தப் பெறுமதி** ☐

***.......... இனால் முன்வைக்கப்பட்டது***

| | | |
|---|---|---|
| பெயர் | (இலங்கையர்கள் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதோர் - கடவுச்சீட்டின்படி)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு - கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| பதவிப்பெயர் | பணிப்பாளர் / செயலாளர் / பங்குதாரர் / பணிப்பாளரும் பங்குதாரரும் / பணிப்பாளரும் செயலாளரும் / பணிப்பாளர், செயலாளரும் பங்குதாரரும் / செயலாளரும் பங்குதாரரும் | |
| மின்னஞ்சல் முகவரி | | |
| தொலைபேசி இல. | | |
| செல்லிடத் தொலைபேசி இலக்கம் | | |
| வதிவிட முகவரி | | |
| திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | கையொப்பம் |

[1] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 203 ஆம் பிரிவு*

[2] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 221(2) ஆம் பிரிவு*

[3] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 4(1)(அ) என்னும் பிரிவு".*

(2) படிவம் 5 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

**"படிவம் 5**

**உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டவொரு கம்பனிக்கான விண்ணப்பம்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 32 மற்றும் 34 ஆம் பிரிவுகள்*

| | |
|---|---|
| முன்மொழியப்பட்ட கம்பனியின் பெயர் | |
| கம்பனியின் வகை | |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | (இலங்கையில் உள்ளபடியான முகவரி - அஞ்சற் பெட்டி முகவரியாக இருத்தலாகாது) |

**ஆரம்பப் பணிப்பாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | (இலங்கையர் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டின்படி) | |
| | தேஅஅ இல./ கடவுச்சீட்டு இல. மற்றும் வழங்குகை நாடு | (இலங்கையர் – தேஅஅ இல.)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டு இலக்கமும் வழங்குகை நாடும்) | |
| | மின்னஞ்சல் முகவரி | | |
| | வதிவிட முகவரி | | |
| | செல்லிடத் தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| | நியமனத் திகதி : | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | |
| | ☐ | [1]மேலேயுள்ள கம்பனியின் பணிப்பாளராக இருப்பதற்குச் சம்மதிக்கின்றேன். | |
| | ☐ | [1]கம்பனியொன்றின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவிவகிப்பதற்கு நான் தகுதியற்றவர் அல்லர் எனச் சான்றளிக்கின்றேன். | கையொப்பம் |

**ஆரம்ப உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | (இலங்கையர் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டின்படி) | |
| | தேஅஅ இல./ கடவுச்சீட்டு இல. மற்றும் வழங்குகை நாடு | (இலங்கையர் – தேஅஅ இல.)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டு இலக்கமும் வழங்குகை நாடும்) | |
| | மின்னஞ்சல் முகவரி | | |
| | வதிவிட முகவரி | | |
| | செல்லிடத்தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| | திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகைசெய்யவும். | |
| | ☐ | முன்மொழியப்பட்ட கம்பனியின் அமைப்பக விதிகள் பின்னிணைப்பு "அ" வில் தரப்பட்டுள்ளவாறானவையெனச் சான்றளிக்கின்றேன். | கையொப்பம் |

**ஆரம்பச் செயலாளர் / செயலாளர்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | (தனியாள் - தேஅஅ இன்படியான பெயர்)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு- கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| தேஅஅ இல. / கம்பனி இல./ குறியீட்டு இல. | | |
| செயலாளர் பதிவிலக்கம் | | |
| மின்னஞ்சல் முகவரி | | |
| நிரந்தர முகவரி | | |
| செல்லிடத் தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| நியமனத் திகதி: | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும். | |
| ☐ | [2]மேற்படி கம்பனியின் செயலாளராக / செயலாளர்களாக இருப்பதற்கு நான் / நாம் சம்மதிக்கின்றேன் / சம்மதிக்கின்றோம். | |
| ☐ | [2]சட்டத்தின் 222 ஆம் பிரிவுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க மேற்படி கம்பனியின் செயலாளர் பதவியை வகிப்பதற்கு நியமிக்கப்படுவதற்கான தகைமைகளை நான் / நாம் கொண்டுள்ளேன் / கொண்டுள்ளோம் எனச் சான்றளிக்கின்றேன் / சான்றளிக்கின்றோம். | கையொப்பம் |

**.......... இனால் முன்வைக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| பெயர் | (இலங்கையர்கள் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதோர் - கடவுச்சீட்டின்படி)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு - கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| பதவிப் பெயர் | பணிப்பாளர் / செயலாளர் / உறுப்பினர் | |
| மின்னஞ்சல் முகவரி | | |
| தொலைபேசி இல. | | |
| செல்லிடத் தொலைபேசி இலக்கம் | | |
| வதிவிட முகவரி | | |
| திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும். | கையொப்பம் |

[1] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 203 ஆம் பிரிவு*

[2] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 221(2) ஆம் பிரிவு*".

(3) அதன் படிவம் 20 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"படிவம் 20

**பணிப்பாளரின் / செயலாளரின் மாற்றமும் பணிப்பாளரின் / செயலாளரின் விபரங்களும்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 223 (2)*

மாற்றம் ஏற்பட்டதிலிருந்து 20 வேலைநாட்களினுள், கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| கம்பனியின் இலக்கம் | | | |
| கம்பனியின் பெயர் | | | |

**தோதான பெட்டியில் ✓ என்பதனை இடுவதன்மூலம் இவ்வறிவித்தல் எந்த நோக்கத்துக்காகக் கொடுக்கப்படுகின்றதோ அந்த நோக்கத்தைச் சுட்டிக்காட்டவும்**

| பணிப்பாளரின் / பணிப்பாளர்களின் மாற்றம் | பணிப்பாளரின் / பணிப்பாளர்களின் நியமனம் | பணிப்பாளரின் / பணிப்பாளர்களின் விபரங்களிலான மாற்றம் | செயலாளரின் மாற்றம் | செயலாளரின் நியமனம் | செயலாளரின் விபரங்களிலான மாற்றம் |
|---|---|---|---|---|---|
| ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

**பதவிவகிக்காதொழியும் ஆள்**

| முழுப்பெயர் | பதவிப் பெயர் | முகவரி | அலுவலர் பதவி வகிக்காதொழிந்த திகதி | காரணம் |
|---|---|---|---|---|
| | பணிப்பாளர் / செயலாளர் | | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும் | |

**புதிய பணிப்பாளர்களை நியமித்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | (இலங்கையர் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டின்படி) | |
| | தேஅஅ இல./ கடவுச்சீட்டு இல. மற்றும் வழங்குகை நாடு | (இலங்கையர் – தேஅஅ இல.)<br>(இலங்கையரல்லாதவர் - கடவுச்சீட்டு இலக்கமும் வழங்குகை நாடும்) | |
| | நியமனத் திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும் | |
| | மின்னஞ்சல் முகவரி | | |
| | வதிவிட முகவரி | | |
| | செல்லிடத் தொலைபேசி இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| | ☐ [i] மேற்படி கம்பனியின் பணிப்பாளரொருவராக இருப்பதற்குச் சம்மதிக்கின்றேன். | | |
| | ☐ [i] ஒரு கம்பனியின் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பதவி வகிப்பதிலிருந்து நான் தகைமையற்றவரல்லர் எனச் சான்றளிக்கின்றேன். | | கையொப்பம் |

**புதிய செயலாளர் ஒருவரை நியமித்தல்**

| | | |
|---|---|---|
| பெயர் | (தனியாள் - தேஅஅ இன்படியான பெயர்)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு- கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| தேஅஅ இல./<br>கம்பனி இல./<br>குறிப்பீட்டு இல. | | |
| செயலாளர்<br>பதிவிலக்கம் | | |
| மின்னஞ்சல்<br>முகவரி | | |
| நிரந்தர முகவரி | | |
| செல்லிடத்<br>தொலைபேசி<br>இலக்கம் | (குறுஞ்செய்திச் சேவைக்காக) | |
| நியமனத் திகதி: | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும். | |
| ☐ | [2] மேற்படி கம்பனியின் செயலாளராக இருப்பதற்குச் சம்மதிக்கின்றேன். | |
| ☐ | *[2] 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கம்பனிகள் (செயலாளர்கள்) ஒழுங்கு விதிகளின்கீழும் கம்பனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவிற்கிணங்கவும் மேற்படி கம்பனியின் செயலாளர் பதவியை வகிப்பதற்கு நியமிக்கப்படுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளேன் எனச் சான்றளிக்கின்றேன்.* | கையொப்பம் |

**பணிப்பாளரின் / செயலாளரின் பெயர் / தேஅஅ / கடவுச்சீட்டு /முகவரி / மின்னஞ்சல் / கடவுச்சீட்டு வழங்கும் நாடு என்பவற்றிலான மாற்றம்**

| | மாற்றத்துக்கு முன்னர் | மாற்றத்தின் விளைவாக | பயனுறும் திகதி |
|---|---|---|---|
| பெயர் | | | |
| தேஅஅ | | | |
| வதிவிட முகவரி | | | |
| மின்னஞ்சல் | | | |

**மாற்றங்களை அடுத்துப்பின்னர் கம்பனியின் ஏலவேயுள்ள பணிப்பாளர்களினதும் செயலாளர்களினதும் விபரங்கள்**

| பெயர் (தேஅஅ அல்லது கடவுச்சீட்டின்படி) | பதவிப்பெயர் | வதிவிட முகவரி |
|---|---|---|
| | பணிப்பாளர்/<br>செயலாளர் | |
| | பணிப்பாளர்/<br>செயலாளர் | |

**………. இனால் முன்வைக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| பெயர் | (இலங்கையர்கள் - தேஅஅ இன்படி)<br>(இலங்கையரல்லாதோர் - கடவுச்சீட்டின்படி)<br>(கூட்டிணைக்கப்பட்ட குழு - கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயர்)<br>(குழுமம் - குழுமத்தின் பெயர்) | |
| பதவிப்பெயர் | பணிப்பாளர் / செயலாளர் | |
| மின்னஞ்சல் முகவரி | | |
| தொலைபேசி இல. | | |
| செல்லிடத் தொலைபேசி இலக்கம் | | |
| வதிவிட முகவரி | | கையொப்பம் |
| திகதி | ஒரு திகதியைப் பதிவதற்கு இங்கு பதிகை செய்யவும். | |

[1] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 203 ஆம் பிரிவு*
[2] *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 221(2) ஆம் பிரிவு.*

---

*ச.வ.-பி. 6/2022*

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் **ரமேஷ் பத்திரண,**
*கைத்தொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, ஒற்றோபர் 16.*

**ஒழுங்குவிதிகள்**

*2023 ஆம் ஆண்டு மார்ச்சு 17 ஆந் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கம்பனிகள் (செயலாளர்கள்) ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:*

*(1) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை, அதன் (1) ஆம் உபஒழுங்குவிதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;*

*(2) அதன் மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உப ஒழுங்குவிதியை உடனடுத்து அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உப ஒழுங்குவிதியாக இலக்கமிடப்படவேண்டிய பின்வரும் உப ஒழுங்குவிதியைச் சேர்ப்பதன்மூலமும்:-*

*"(2) ஓராம் உப ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு தொழில்புரிகைச் சான்றிதழும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் அலுவலக முறையான வலைத்தளத்தில் தரப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.";*

(3) ஒன்பதாம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் (1அ) என்னும் உபஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்:

"(1அ) ஓராம் உப ஒழுங்குவிதியின்கீழ் தொழில்புரிகைச் சான்றிதழை - தனிப்பட்ட, அல்லது தொழில்புரிகைச் சான்றிதழை - கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது குழுமம், புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் அலுவலகமுறையான வலைத்தளத்தில் தரப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(4) அதன் 11 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில் "3 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியின் (ஈ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "3 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியின் (உ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

EOG 10-0182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.